ذُقْ ۚ إِنَّكَ أَنْتَ الْعَزِيزُ الْكَرِيمُ ﴿٤٩﴾ إِنَّ هٰذَا مَا كُنْتُمْ بِهٖ
تَمْتَرُونَ ﴿٥٠﴾ إِنَّ الْمُتَّقِينَ فِي مَقَامٍ أَمِينٍ ﴿٥١﴾ فِي جَنّٰتٍ وَّعُيُونٍ ﴿٥٢﴾
يَّلْبَسُونَ مِنْ سُنْدُسٍ وَّإِسْتَبْرَقٍ مُّتَقٰبِلِينَ ﴿٥٣﴾ كَذٰلِكَ وَزَوَّجْنٰهُمْ
بِحُورٍ عِينٍ ﴿٥٤﴾ يَدْعُونَ فِيهَا بِكُلِّ فَاكِهَةٍ اٰمِنِينَ ﴿٥٥﴾ لَا يَذُوقُونَ
فِيهَا الْمَوْتَ إِلَّا الْمَوْتَةَ الْأُولٰى ۚ وَوَقٰهُمْ عَذَابَ الْجَحِيمِ ﴿٥٦﴾
فَضْلًا مِّنْ رَّبِّكَ ۚ ذٰلِكَ هُوَ الْفَوْزُ الْعَظِيمُ ﴿٥٧﴾ فَإِنَّمَا يَسَّرْنٰهُ
بِلِسَانِكَ لَعَلَّهُمْ يَتَذَكَّرُونَ ﴿٥٨﴾ فَارْتَقِبْ إِنَّهُمْ مُّرْتَقِبُونَ ﴿٥٩﴾ ع ٣ ١٧ ١٦

## سورة الجاثية مكية وهي سبع وثلثون آية واربع ركوعات

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ ○

حٰمٓ ﴿١﴾ تَنْزِيلُ الْكِتٰبِ مِنَ اللّٰهِ الْعَزِيزِ الْحَكِيمِ ﴿٢﴾ إِنَّ فِي السَّمٰوٰتِ
وَالْأَرْضِ لَاٰيٰتٍ لِّلْمُؤْمِنِينَ ﴿٣﴾ وَفِي خَلْقِكُمْ وَمَا يَبُثُّ مِنْ دَآبَّةٍ
اٰيٰتٌ لِّقَوْمٍ يُّوقِنُونَ ﴿٤﴾ وَاخْتِلَافِ الَّيْلِ وَالنَّهَارِ وَمَآ أَنْزَلَ
اللّٰهُ مِنَ السَّمَآءِ مِنْ رِّزْقٍ فَأَحْيَا بِهِ الْأَرْضَ بَعْدَ مَوْتِهَا وَ
تَصْرِيفِ الرِّيٰحِ اٰيٰتٌ لِّقَوْمٍ يَّعْقِلُونَ ﴿٥﴾ تِلْكَ اٰيٰتُ اللّٰهِ نَتْلُوهَا
عَلَيْكَ بِالْحَقِّ ۚ فَبِأَيِّ حَدِيثٍ بَعْدَ اللّٰهِ وَاٰيٰتِهٖ يُؤْمِنُونَ ﴿٦﴾

49. "நீ (இவ்வேதனையைச்) சுவைத்துப்பார்; நிச்சயமாக, நீ தான் மிக்க கண்ணியமும், மரியாதையுமுடையவன்; (என்று ஏளனமாகக் கூறப்படும்)
50. நிச்சயமாக இது எதை நீங்கள் சந்தேகித்துக்கொண்டிருந்தீர்களோ அதுவேயாகும் (என்றும் கூறப்படும்).
51. நிச்சயமாக, பயபக்தியுடையவர்கள் அச்சமற்ற இடத்திலிருப்பார்கள்.
52. சுவனபதியின் சோலை) களிலும், நீர் ஊற்றுக்களிலே (அவற்றினிடையே)யும் (இருப்பார்கள்).
53. ஒருவரையொருவர் முன்நோக்கியவர்களாக மெல்லியதும், திடமானதுமான பட்டாடைகளை அணிந்து கொண்டிருப்பார்கள்.
54. இவ்வாறே (அது நடைபெறும்); மேலும், "ஹூருல்ஈன்" (என்னும் கண்ணழகிகளாகிய கன்னிகை) களையும் நாம் அவர்களுக்குத் திருமணம் செய்துவைப்போம்.
55. அச்சமற்றவர்களாக கனி வர்க்கங்கள் ஒவ்வொன்றையும், அங்கு கேட்டுக் கொண்டும் இருப்பார்கள்.
56. முந்திய மரணத்தைத் தவிர; அவற்றில் அவர்கள் (வேறு யாதொரு) மரணத்தையும் சுவைக்கமாட்டார்கள்; மேலும், நரக வேதனையை விட்டும் அவர்களை (அல்லாஹ்வாகிய)அவன் காத்துக்கொண்டான்.
57. (நபியே! இது) உமதிரட்சகனின் பேரருளாக( வழங்கப்படுகிறது); அதுதான் மகத்தான வெற்றியாகும்.
58. ஆகவே, (வேதமாகிய) இதனை நாம் உம்முடைய மொழியில் எளிதாக்கி வைத்திருப்பதெல்லாம், அவர்கள் நல்லுபதேசம் பெறுவதற்காகத்தான்.
59. ஆகவே, (நல்லுபதேசம் பெறாவிடில், அதனால் ஏற்படும் தீயமுடிவை) நீர் எதிர்பார்த்திரும்; நிச்சயமாக, அவர்களும் எதிர்பார்க்கக் கூடியவர்கள்தாம்.

---

அத்தியாயம் : 45

## அல் ஜாஸியா _ முழந்தாளிடுதல்

வசனங்கள் : 37 மக்கீ ருகூஃகள் : 4

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).**

1. ஹாமீம்
2. (யாவரையும்) மிகைத்தோன் தீர்க்கமான அறிவுடையோன் ஆகிய அல்லாஹ்விடமிருந்து இவ்வேதம் இறக்கப்பட்டுள்ளது.
3. விசுவாசங்கொண்டோர்க்கு நிச்சயமாக வானங்களிலும், பூமியிலும் அத்தாட்சிகளிருக்கின்றன.
4. இன்னும், உங்களைப் படைத்திருப்பதிலும், ஜீவராசிகளை அவன் பரவச்செய்திருப்பதிலும், (விசுவாசத்தில்) உறுதிகொள்கின்ற சமூகத்தார்க்கு அத்தாட்சிகளிருக்கின்றன.
5. மேலும், இரவு பகல் மாறி மாறி வருவதிலும், இன்னும் வானத்திலிருந்து மழையை அல்லாஹ் இறக்கிவைத்து, அதனைக் கொண்டு பூமியை அது (வறட்சியினால்)இறந்துபோனபின் உயிர்ப்பிப்பதிலும், (நாலாபாகங்களிலும் பருவத்திற்குத்தக்கவாறு) காற்றுகளைத் திருப்பிவிடுவதிலும் விளங்கிக் கொள்ளும் சமூகத்தார்க்கு அத்தாட்சிகளிருக்கின்றன.
6. அவை (களைத் தன்னகத்தே கொண்ட குர்ஆன்) அல்லாஹ்வுடைய வசனங்களாகும்; உண்மையைக் கொண்டு அவற்றை உம்மீது நாம் ஓதிக் காண்பிக்கிறோம்; எனவே அல்லாஹ்வுக்கும், அவனுடைய வசனங்களுக்கும் பின்னர், இவர்கள் எச்செய்தியைத்தான் நம்புவார்கள்!

وَيْلٌ لِّكُلِّ أَفَّاكٍ أَثِيمٍ ﴿٧﴾ يَسْمَعُ آيَاتِ اللَّهِ تُتْلَىٰ عَلَيْهِ ثُمَّ يُصِرُّ مُسْتَكْبِرًا
كَأَن لَّمْ يَسْمَعْهَا ۖ فَبَشِّرْهُ بِعَذَابٍ أَلِيمٍ ﴿٨﴾ وَإِذَا عَلِمَ مِنْ آيَاتِنَا شَيْئًا
اتَّخَذَهَا هُزُوًا ۚ أُولَٰئِكَ لَهُمْ عَذَابٌ مُّهِينٌ ﴿٩﴾ مِّن وَرَائِهِمْ جَهَنَّمُ ۖ
وَلَا يُغْنِي عَنْهُم مَّا كَسَبُوا شَيْئًا وَلَا مَا اتَّخَذُوا مِن دُونِ اللَّهِ أَوْلِيَاءَ ۖ
وَلَهُمْ عَذَابٌ عَظِيمٌ ﴿١٠﴾ هَٰذَا هُدًى ۖ وَالَّذِينَ كَفَرُوا بِآيَاتِ رَبِّهِمْ لَهُمْ
عَذَابٌ مِّن رِّجْزٍ أَلِيمٌ ﴿١١﴾ اللَّهُ الَّذِي سَخَّرَ لَكُمُ الْبَحْرَ لِتَجْرِيَ الْفُلْكُ ع ١١/١٧
فِيهِ بِأَمْرِهِ وَلِتَبْتَغُوا مِن فَضْلِهِ وَلَعَلَّكُمْ تَشْكُرُونَ ﴿١٢﴾ وَسَخَّرَ لَكُم مَّا
فِي السَّمَاوَاتِ وَمَا فِي الْأَرْضِ جَمِيعًا مِّنْهُ ۚ إِنَّ فِي ذَٰلِكَ لَآيَاتٍ
لِّقَوْمٍ يَتَفَكَّرُونَ ﴿١٣﴾ قُل لِّلَّذِينَ آمَنُوا يَغْفِرُوا لِلَّذِينَ لَا يَرْجُونَ
أَيَّامَ اللَّهِ لِيَجْزِيَ قَوْمًا بِمَا كَانُوا يَكْسِبُونَ ﴿١٤﴾ مَنْ عَمِلَ صَالِحًا
فَلِنَفْسِهِ ۖ وَمَنْ أَسَاءَ فَعَلَيْهَا ۖ ثُمَّ إِلَىٰ رَبِّكُمْ تُرْجَعُونَ ﴿١٥﴾ وَلَقَدْ
آتَيْنَا بَنِي إِسْرَائِيلَ الْكِتَابَ وَالْحُكْمَ وَالنُّبُوَّةَ وَرَزَقْنَاهُم مِّنَ الطَّيِّبَاتِ
وَفَضَّلْنَاهُمْ عَلَى الْعَالَمِينَ ﴿١٦﴾ وَآتَيْنَاهُم بَيِّنَاتٍ مِّنَ الْأَمْرِ ۖ فَمَا اخْتَلَفُوا
إِلَّا مِن بَعْدِ مَا جَاءَهُمُ الْعِلْمُ بَغْيًا بَيْنَهُمْ ۚ إِنَّ رَبَّكَ
يَقْضِي بَيْنَهُمْ يَوْمَ الْقِيَامَةِ فِيمَا كَانُوا فِيهِ يَخْتَلِفُونَ ﴿١٧﴾

7. (நாவால்) பெரும் பொய்கூறி, (செயலால்) பாவியான ஒவ்வொருவருக்கும் கேடுதான்.

8. தன்மீது ஓதிக்காண்பிக்கப்படும் அல்லாஹ்வின் வசனங்களை அவன் (செவியேற்றுக்) கேட்கிறான்; பின்னர் கர்வங்கொண்டு அவற்றைக் (காதால்) கேட்காதவனைப்போல் (தன் நிராகரிப்பில்) பிடிவாதமாக இருக்கின்றான்; அ(த்தகைய)வனுக்குத் துன்புறுத்தும் வேதனையைக் கொண்டு (நபியே !) நீர் நன்மாராயங் கூறுவீராக!

9. மேலும், நம்முடைய வசனங்களில் எதனையாவது அவன் அறிந்து கொண்டால், அதனை அவன் பரிகாசமாக எடுத்துக்கொள்கிறான்; அத்தகையோர் _அவர்களுக்கு இழிவு தரும் வேதனை உண்டு.

10. அவர்களுக்கு முன்னால் நரகந்தான் இருக்கின்றது; அவர்கள் சம்பாதித்துக் கொண்டவை எவையும் அவர்களுக்குப் பயனளிக்காது; அல்லாஹ்வையன்றி பாதுகாப்பாளர்களாக அவர்கள் எடுத்துக் கொண்டவர்களும் (அவர்களுக்குப் பயன் அளிப்பவர்) அல்லர்; மேலும், அவர்களுக்கு மகத்தான வேதனையுமுண்டு.

11. (குர்ஆனாகிய) இது நேர் வழியாகும்; இன்னும், தங்களுடைய இரட்சகனின் வசனங்களை நிராகரிக்கின்றார்களே அத்தகையோர் _ அவர்களுக்கு மிகக்கடுமையான வேதனையிலிருந்து துன்புறுத்தும் வேதனையுண்டு.

12. அல்லாஹ் எத்தகையவனென்றால், கடலை _ அதில் அவன் கட்டளையைக் கொண்டு கப்பல்கள் செல்வதற்காகவும், மேலும் (அதன் மூலம்), அவனின் பேரருளை நீங்கள் தேடிக்கொள்வதற்காகவும், நீங்கள் நன்றி செலுத்துவதற்காகவும் உங்களுக்காக அவன் வசப்படுத்திக் கொடுத்தான்.

13. இன்னும், வானங்களில் உள்ளவை, பூமியிலுள்ளவை அனைத்தையும் தன்னிடமிருந்து உங்களுக்கு அவனே வசப்படுத்திக் கொடுத்தான்; நிச்சயமாக, இதில் சிந்திக்கும் சமூகத்தார்க்கு பல அத்தாட்சிகள் இருக்கின்றன.

14. (நபியே!)விசுவாசங்கொண்டோருக்கு நீர் கூறுவீராக: அல்லாஹ்வுடைய (தண்டனைகளின்) நாட்களை நம்பாதவர்களை, அவர்கள் மன்னித்துவிடட்டும்; ஏனென்றால், அவர்கள் சம்பாதித்துக் கொண்டவற்றிற்குப் பிரதியாக கூட்டத்தினருக்கு அவன் கூலி கொடுப்பதற்காக.

15. எவர் நற்செயல் செய்கின்றாரோ, (அது) அவருக்கே நன்று; எவர் தீமை செய்கின்றாரோ (அது) அவருக்கே கேடாகும், பின்னர் நீங்கள் உங்கள் இரட்சகனின்பக்கமே மீட்டப்படுவீர்கள்.

16. நிச்சயமாக, நாம் இஸ்ராயீலின் மக்களுக்கு வேதத்தையும், அதிகாரத்தையும், நபித்துவத்தையும் கொடுத்தோம்; மேலும் (உண்ணுவதற்கு) நல்லவற்றிலிருந்து அவர்களுக்கு உணவும் கொடுத்தோம்; அன்றியும் அகிலத்தாரைவிட அவர்களை நாம் மேன்மையாக்கியும் வைத்தோம்.

17. இன்னும், (மார்க்கக்) காரியத்தில் (சான்றுகளிலிருந்து) தெளிவானவைகளை நாம் அவர்களுக்குக் கொடுத்தோம்; பின்னர், அவர்கள் தங்களுக்கிடையே உண்டான பொறாமையின் காரணமாக, அவர்களுக்கு (வேத) அறிவு வந்ததன் பின்னரே தவிர அவர்கள் அபிப்பிராயபேதம் கொள்ளவில்லை; (நபியே!) நிச்சயமாக உமதிரட்சகன், அவர்கள் எதில் அபிப்பிராயபேதம் கொண்டிருந்தார்களோ அதில், மறுமை நாளில் அவர்களிடையே தீர்ப்பளிப்பான்.

ثُمَّ جَعَلْنٰكَ عَلٰى شَرِيْعَةٍ مِّنَ الْاَمْرِ فَاتَّبِعْهَا وَلَا تَتَّبِعْ اَهْوَآءَ
الَّذِيْنَ لَا يَعْلَمُوْنَ ﴿١٨﴾ اِنَّهُمْ لَنْ يُّغْنُوْا عَنْكَ مِنَ اللّٰهِ شَيْـًٔا ؕ وَ
اِنَّ الظّٰلِمِيْنَ بَعْضُهُمْ اَوْلِيَآءُ بَعْضٍ ۚ وَاللّٰهُ وَلِيُّ الْمُتَّقِيْنَ ﴿١٩﴾
هٰذَا بَصَآئِرُ لِلنَّاسِ وَهُدًى وَّرَحْمَةٌ لِّقَوْمٍ يُّوْقِنُوْنَ ﴿٢٠﴾ اَمْ
حَسِبَ الَّذِيْنَ اجْتَرَحُوا السَّيِّاٰتِ اَنْ نَّجْعَلَهُمْ كَالَّذِيْنَ اٰمَنُوْا
وَعَمِلُوا الصّٰلِحٰتِ ۙ سَوَآءً مَّحْيَاهُمْ وَمَمَاتُهُمْ ؕ سَآءَ مَا يَحْكُمُوْنَ ﴿٢١﴾ وَ ع ٢ ١٨
خَلَقَ اللّٰهُ السَّمٰوٰتِ وَالْاَرْضَ بِالْحَقِّ وَلِتُجْزٰى كُلُّ نَفْسٍۭ بِمَا
كَسَبَتْ وَهُمْ لَا يُظْلَمُوْنَ ﴿٢٢﴾ اَفَرَءَيْتَ مَنِ اتَّخَذَ اِلٰهَهٗ هَوٰىهُ وَاَضَلَّهُ اللّٰهُ
عَلٰى عِلْمٍ وَّخَتَمَ عَلٰى سَمْعِهٖ وَقَلْبِهٖ وَجَعَلَ عَلٰى بَصَرِهٖ غِشٰوَةً ؕ فَمَنْ
يَّهْدِيْهِ مِنْۢ بَعْدِ اللّٰهِ ؕ اَفَلَا تَذَكَّرُوْنَ ﴿٢٣﴾ وَقَالُوْا مَا هِىَ اِلَّا حَيَاتُنَا
الدُّنْيَا نَمُوْتُ وَنَحْيَا وَمَا يُهْلِكُنَآ اِلَّا الدَّهْرُ ۚ وَمَا لَهُمْ بِذٰلِكَ
مِنْ عِلْمٍ ۚ اِنْ هُمْ اِلَّا يَظُنُّوْنَ ﴿٢٤﴾ وَاِذَا تُتْلٰى عَلَيْهِمْ اٰيٰتُنَا بَيِّنٰتٍ
مَّا كَانَ حُجَّتَهُمْ اِلَّآ اَنْ قَالُوا ائْتُوْا بِاٰبَآئِنَآ اِنْ كُنْتُمْ
صٰدِقِيْنَ ﴿٢٥﴾ قُلِ اللّٰهُ يُحْيِيْكُمْ ثُمَّ يُمِيْتُكُمْ ثُمَّ يَجْمَعُكُمْ اِلٰى
يَوْمِ الْقِيٰمَةِ لَا رَيْبَ فِيْهِ وَلٰكِنَّ اَكْثَرَ النَّاسِ لَا يَعْلَمُوْنَ ﴿٢٦﴾ ع ٣ ٥ ١٩

18. இதன் பின்னர் (மார்க்கக்) காரியத்தில் (தெளிவான) ஒரு வழியின் மீது உம்மை நாம் ஆக்கி இருக்கின்றோம்; ஆகவே, அதனை(யே) நீர் பின்பற்றுவீராக! (உண்மையை) அறியாதவர்களாக இருக்கிறார்களே அவர்களின் மனோ இச்சைகளை நீர் பின்பற்றாதீர்.

19. நிச்சயமாக, அவர்கள் அல்லாஹ்வுக்கு விரோதமாக உம்மைவிட்டு எதனையும் தடுத்து விடவேமாட்டார்கள்; நிச்சயமாக, அநியாயக்காரர்கள் _ அவர்களில் சிலர், சிலருக்கு உதவியாளர்களாகவும் இருக்கிறார்கள்; இன்னும் அல்லாஹ், பயபக்தியுடையவர்களின் பாதுகாவலன்.

20. (குர்ஆனாகிய) இது மனிதர்களுக்குத் தெளிவான ஆதாரங்களாகவும், உறுதி கொள்கின்ற சமூகத்தார்க்கு நேர் வழியாகவும், அருளாகவும் இருக்கிறது.

21. தீமைகளைச் சம்பாதித்துக் கொண்டார்களே அத்தகையோர் _ விசுவாசங்கொண்டு நற்கருமங்களையும் செய்தார்களே அத்தகையோரைப் போன்று அவர்களையும் நாம் ஆக்கிவிடுவோம் என்று எண்ணிக் கொண்டார்களா? அவர்கள் ஜீவித்து இருப்பதும், அவர்கள் மரணித்துவிடுவதும் சமமே; அவர்கள் (இதற்கு மாறாகத்) தீர்ப்புச் செய்து கொண்டது மிகக்கெட்டதாகி விட்டது.

22. வானங்களையும் பூமியையும் அல்லாஹ் நீதியைக் கொண்டு (தக்க காரணத்திற்காகவே) படைத்திருக்கிறான்; இன்னும், ஒவ்வொரு ஆத்மாவும் அது சம்பாதித்ததைக்கொண்டு கூலி கொடுக்கப்படுவதற்காகவும் (படைத்துள்ளான்); அவர்கள் அநியாயம் செய்யப்படவுமாட்டார்கள்.

23. (நபியே!) தன்னுடைய (மனோ) இச்சையை(த் தான் வணங்கும்) தெய்வமாக எடுத்துக்கொண்டானே அவனை நீர் பார்த்தீரா? (அவன் வழி கெடுவதற்கு உரியவன் என்ற தன்) அறிவினால் அல்லாஹ் அவனைத் தவறான வழியில் விட்டு விட்டான்; அவனுடைய செவியின் மீதும், அவனுடைய இதயத்தின் மீதும் முத்திரையிட்டுவிட்டான்; அன்றியும், அவனுடைய பார்வையின் மீதும் ஒரு திரையை ஆக்கிவிட்டான்; அல்லாஹ்வுக்குப்பிறகு, அவனுக்கு நேர் வழிகாட்டுபவர் யார்? நீங்கள் நினைவுகூ(ர்ந்து உண)ரமாட்டீர்களா?

24. "இது நமது இவ்வுலக வாழ்க்கையைத் தவிர வேறு(வாழ்க்கை) இல்லை;" (இதில்தான்) நாம் இறந்துவிடுகின்றோம்; இன்னும், ஜீவிக்கிறோம்; காலத்தைத் தவிர வேறெதுவும் நம்மை அழிப்பதில்லை" என்றும் அவர்கள் கூறுகின்றனர்; அது பற்றிய எவ்வித அறிவும் அவர்களுக்கில்லை; அவர்கள் (வீண் கற்பனையாக) எண்ணுகிறார்களே தவிர (வேறு) இல்லை.

25. மேலும், அவர்களுக்கு நம்முடைய தெளிவான வசனங்கள் ஓதிக் காண்பிக்கப் பட்டால், அவர்களின் வாதம் "நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் எங்களுடைய மூதாதையரை (உயிர்ப்பித்து)க் கொண்டுவாருங்கள்" என்று அவர்கள் கூறுவதைத் தவிர (வேறெதுவும்) இல்லை.

26. (நபியே!) நீர் (அவர்களிடம்) கூறுவீராக: "அல்லாஹ்(தான்) உங்களை உயிர்ப்பிக்கிறான்; பின்னர், உங்களை அவன் மரணிக்கச்செய்கிறான்; பின்னர், மறுமை நாளுக்காக _ (உயிர் கொடுத்து) உங்களை அவன் ஒன்று சேர்ப்பான்; _ இதில் சந்தேகமில்லை; எனினும், மனிதர்களில் பெரும்பாலோர் (இதனை) அறியமாட்டார்கள்.

وَلِلّٰهِ مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ۭ وَيَوْمَ تَقُوْمُ السَّاعَةُ يَوْمَىِٕذٍ يَّخْسَرُ
الْمُبْطِلُوْنَ ﴿۲۷﴾ وَتَرٰى كُلَّ اُمَّةٍ جَاثِيَةً ۣ كُلُّ اُمَّةٍ تُدْعٰٓى اِلٰى كِتٰبِهَا ۭ
اَلْيَوْمَ تُجْزَوْنَ مَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿۲۸﴾ هٰذَا كِتٰبُنَا يَنْطِقُ عَلَيْكُمْ
بِالْحَقِّ ۭ اِنَّا كُنَّا نَسْتَنْسِخُ مَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿۲۹﴾ فَاَمَّا الَّذِيْنَ اٰمَنُوْا
وَعَمِلُوا الصّٰلِحٰتِ فَيُدْخِلُهُمْ رَبُّهُمْ فِيْ رَحْمَتِهٖ ۭ ذٰلِكَ هُوَ الْفَوْزُ
الْمُبِيْنُ ﴿۳۰﴾ وَاَمَّا الَّذِيْنَ كَفَرُوْا ۣ اَفَلَمْ تَكُنْ اٰيٰتِيْ تُتْلٰى عَلَيْكُمْ
فَاسْتَكْبَرْتُمْ وَكُنْتُمْ قَوْمًا مُّجْرِمِيْنَ ﴿۳۱﴾ وَاِذَا قِيْلَ اِنَّ وَعْدَ
اللّٰهِ حَقٌّ وَّالسَّاعَةُ لَا رَيْبَ فِيْهَا قُلْتُمْ مَّا نَدْرِيْ مَا السَّاعَةُ
اِنْ نَّظُنُّ اِلَّا ظَنًّا وَّمَا نَحْنُ بِمُسْتَيْقِنِيْنَ ﴿۳۲﴾ وَبَدَا لَهُمْ سَيِّاٰتُ مَا
عَمِلُوْا وَحَاقَ بِهِمْ مَّا كَانُوْا بِهٖ يَسْتَهْزِءُوْنَ ﴿۳۳﴾ وَقِيْلَ الْيَوْمَ
نَنْسٰىكُمْ كَمَا نَسِيْتُمْ لِقَاۗءَ يَوْمِكُمْ هٰذَا وَمَاْوٰىكُمُ النَّارُ وَمَا لَكُمْ
مِّنْ نّٰصِرِيْنَ ﴿۳۴﴾ ذٰلِكُمْ بِاَنَّكُمُ اتَّخَذْتُمْ اٰيٰتِ اللّٰهِ هُزُوًا وَّغَرَّتْكُمُ
الْحَيٰوةُ الدُّنْيَا ۚ فَالْيَوْمَ لَا يُخْرَجُوْنَ مِنْهَا وَلَا هُمْ يُسْتَعْتَبُوْنَ ﴿۳۵﴾
فَلِلّٰهِ الْحَمْدُ رَبِّ السَّمٰوٰتِ وَرَبِّ الْاَرْضِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۳۶﴾
وَلَهُ الْكِبْرِيَاۗءُ فِي السَّمٰوٰتِ وَالْاَرْضِ ۠ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿۳۷﴾ ع ۴ ۱۱ ۲۰

27. அன்றியும் வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது; மறுமை நாள் நிலைபெறும் நாளில் பொய்யாக்குவோர் அந்நாளில் நஷ்டமடைவார்கள்.

28. (நபியே! அந்நாளில்) ஒவ்வொரு சமுதாயத்தையும் முழந்தாளிட்டிருக்கும் நிலையில் நீர் காண்பீர். ஒவ்வொரு சமுதாயமும் (விசாரணைக்காக) அதனதன் பதிவுப் புத்தகத்தின்பால் அழைக்கப்படும் _ "இன்றையத்தினம் நீங்கள் செய்து கொண்டிருந்தவற்றிற்குக் கூலி கொடுக்கப்படுவீர்கள்" (என்றும்);

29. "இது உங்களைப் பற்றிய உண்மையைக் கூறும் நம்முடைய (பதிவுப்) புத்தகம்; நிச்சயமாக நாம், நீங்கள் செய்துகொண்டிருந்தவற்றை (அதில்) பதிவு செய்பவர்களாக இருந்தோம்" (என்றும் கூறப்படும்).

30. ஆகவே, விசுவாசங்கொண்டு நற்கருமங்களையும் செய்தார்களே அத்தகையோர் _ அவர்களை, அவர்களுடைய இரட்சகன் தன்னுடைய அருளில் நுழைவிக்கிறான்; அதுதான் தெளிவான வெற்றியாகும்.

31. இன்னும், நிராகரித்தார்களே அத்தகையோர் _ (அவர்களிடம்,) "உங்களுக்கு என்னுடைய வசனங்கள் ஓதிக் காண்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கவில்லையா? பின்னர் நீங்கள் பெருமையடித்துக்கொண்டிருந்தீர்கள்; அன்றியும், நீங்கள் குற்றவாளிகளான சமூகத்தாராகவும் இருந்தீர்கள்" (என்றும் கூறப்படும்).

32. மேலும், "நிச்சயமாக அல்லாஹ்வுடைய வாக்குறுதி உண்மையானது; மறுமைநாள் _ அ(து வருமென்ப)தில் யாதொரு சந்தேகமுமில்லை" என்று கூறப்பட்டால், "மறுமைநாள் இன்னதென்றே நாங்கள் அறியோம்; அது வெறும் எண்ணத்தைத் தவிர (வேறு) இல்லை என்றே எண்ணுகிறோம்; (அதனை உண்மையென்று) நாங்கள் உறுதியாக நம்புகிறவர்களாகவும் இல்லை என்று நீங்கள் கூறினீர்கள் (அல்லவா?" என்று அவர்களிடம் கேட்கப்படும்).

33. மேலும், அவர்கள் செய்துகொண்டிருந்த தீயவைகள் (யாவும்,) அவர்களுக்கு வெளிப்பட்டுவிடும்; எதை அவர்கள் பரிகாசம் செய்து கொண்டிருந்தார்களோ, அது அவர்களைச் சூழ்ந்துகொள்ளும்.

34. அன்றியும் (அவர்களிடம்) "நீங்கள் உங்களுடைய இந்நாளின் சந்திப்பை மறந்தவாறே நாமும் இன்றையத் தினம் உங்களை மறந்துவிட்டோம்; மேலும், உங்கள் தங்குமிடம் நரகமாகும்; உங்களுக்கு எந்த உதவியாளர்களுமில்லை" என்றும் கூறப்படும்.

35. "இ(ந்தத் தண்டனையான)து: நிச்சயமாக நீங்கள் அல்லாஹ்வுடைய வசனங்களைப் பரிகாசமாக எடுத்துக்கொண்டீர்கள் என்பதினாலாகும்; இவ்வுலக வாழ்க்கை உங்களை மயக்கியும்விட்டது" (என்று கூறப்படும்); இன்றையத் தினம் அதிலிருந்து அவர்கள் வெளியேற்றப்படமாட்டார்கள்; மேலும், (அந்நாளில் நற்செயல்கள் செய்து இரட்சகனைத்) திருப்திப்படுத்த அவர்கள் தேடப்படமாட்டார்கள்.

36. ஆகவே, வானங்களின் இரட்சகனும், பூமியின் இரட்சகனும், அகிலாத்தாரின் இரட்சகனுமாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரித்தாகும்.

37. வானங்களிலும், பூமியிலும் (உள்ள) பெருமை அவனுக்கே உரியது; அவனே (யாவரையும்) மிகைத்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்.